## சுருக்கம்

பாசனம் – நாமக்கல் மாவட்டம் – இராசிபுரம் வட்டம் – பச்சுடையாம்பாளையம் கிராமத்தில் பைல்நாடு வனப்பகுதி வழியாக பாயும் பாலாற்று நீரை தொப்பப்பட்டி ஏரி மற்றும் அரியாக்கவுண்டம்பட்டி ஏரி ஆயக்கட்டுதாரர்களிடையே முறையே 70 : 30 என்ற விகிதத்தில் நீர்ப்பங்கீடு செய்து பயன்படுத்திக் கொள்ள ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி(என்1)த்துறை

அரசாணை (நிலை) எண்.102 நாள் 26.03.2010

பங்குனி 12,

திருவள்ளுவர் ஆண்டு 2041

**படிக்கப்பட்டது:–**

1. சென்னை உயர்நீதிமன்ற ரிட் மனு எண் 39305 / 2005–ன் 07.12.2005ம் நாளிட்ட ஆணை.
2. ரிட் மனு எண் 39305 / 2005ல் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனு எண் (WPMP) 42123/ 05ல் 07.12.2005 நாளிட்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணை.
3. நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர் கடிதம் எண் 80/ அரசு / கோ 33–2 / பாலாறு / 2005 / இவஅ2, நாள் 25.01.2006 மற்றும் 97 / அரசு / கோ 33–2 / பாலாறு / 2005 / இவஅ2, நாள் 31.01.2006.
4. ரிட் மனு எண் 39305 / 2005ல் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனு எண் (WPMP) 4571 / 2006ல் 26.11.2007 நாளிட்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணை.
5. நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர், கடித எண் 568 / அரசு / கோ–33–2 / பாலாறு / 2006, இவஅ, நாள் 31.08.2007.
6. ரிட் மனு எண் 39305 / 2005ல் ரிட் பல்வகை மனு எண் 4571 / 2006ல் உயர்நீதிமன்றத்தின் 07.01.2008 நாளிட்ட ஆணை.
7. நாமக்கல், மாவட்ட ஆட்சித்தலைவர் கடித எண் 7488 / 2000 / A6, நாள் 6.6.2008.
8. முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண் C1 / 30908 / 2004, நாள் 19.08.2008.
9. நாமக்கல் மாவட்டம், அரியாக்கவுண்டம்பட்டி, ஒடுவன்குறிச்சி மற்றும் கதிராநல்லூர் ஆயக்கட்டு பாசன விவசாயிகள் நலச் சங்கத்தினரின் 27.01.2009ம் நாளிட்ட மனு.
10. நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் கடித எண் 4655 / 2009 / A6, நாள் 02.03.2010.

**ஆணை:**

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், பச்சுடையாம்பாளையம் கிராமத்தில், பைல்நாடு வனப்பகுதி வழியாக பாயும் பாலாற்று நீரை தொப்பப்பட்டி பொன்பரப்பி ஏரி ஆயக்கட்டுதாரர்களுக்கும் மற்றும் அரியாக்கவுண்டம்பட்டி ஆயக்கட்டுதாரர்களுக்குமிடையே பகிர்ந்து கொள்வது குறித்து, அரியாக்கவுண்டம்பட்டி, ஒடுவன்குறிச்சி மற்றும் கதிராநல்லூர் ஆயக்கட்டு பாசன விவசாயிகள் நலச் சங்கம், சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், பார்வை 1ல் படிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற உத்தரவில் இரண்டு ஆயக்கட்டுதாரர்களுக்கும் 50 : 50 என்ற விகிதத்தில் நீரை பகிர்ந்து கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. மேலும், அரியாக்கவுண்டம்பட்டி, ஒடுவன்குறிச்சி மற்றும் கதிராநல்லூர் ஆயக்கட்டுப் பாசன விவசாயிகள் நலச் சங்கத்தால் இந்த ரிட் மனுவில் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனு எண் (MP) 42123 / 05ல் 07.12.2005 அன்று, வாதியான அரியாக்கவுண்டம்பட்டி, ஒடுவன்குறிச்சி மற்றும் கதிராநல்லூர் ஆயக்கட்டுப் பாசன விவசாயிகள் நலச் சங்கத்தின் கோரிக்கையின்படி 50 : 50 என்ற விகிதத்தில் நீரை பகிர்ந்து கொள்வது என்று இரு சங்கங்களும் ஒப்புக் கொண்ட நிலையில், நான்காவது பிரதிவாதியான திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர் உத்தரவு கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து நிரந்தர தடுப்புச் சுவர் கட்டுவதற்கான திருத்திய மதிப்பீட்டினை ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு அனுப்பி வைத்து, அதன்மீது ஒரு மாதத்திற்குள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனவும், அதன் பின்னர் 3 மாதத்திற்குள் பணி முடிக்கப்பட வேண்டும் எனவும் சென்னை உயர்நீதிமன்றம் ஆணையிட்டது.

3. இந்த ரிட் மனுவில், தொப்பப்பட்டி பொன்பரப்பி ஏரி ஆயக்கட்டு விவசாயிகள் நலச் சங்கத்தால் ரிட் மனு எண் 39305 / 2005–ல் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனு எண் 4571 / 2006ல், சென்னை உயர்நீதிமன்றம் 26.11.2007 அன்று வழங்கிய தீர்ப்பில், முதல் பிரதிவாதியான அரியாக்கவுண்டம்பட்டி, ஒடுவன்குறிச்சி மற்றும் கதிராநல்லூர் ஆயக்கட்டு விவசாயிகள் நலச் சங்கத்திற்கு நோட்டீஸ் அனுப்பவும், மேலும் தீர்ப்பு வழங்கப்படும் வரையில் எதிர்வாதிகள் பாலாற்றின் குறுக்கே எவ்வித கட்டுமானத்தை மேற்கொள்ளக்கூடாது எனவும் உத்தரவு பிறப்பித்தது. மேலும், சென்னை உயர்நீதிமன்றம் 7.1.2008 அன்று, ‘இந்தப் பல்வகை மனுவில் (மனு எண் 4571 / 2006) இரு ஆயக்கட்டுதாரர்களும் 50 : 50 என்ற விகிதத்தில் நீரைப் பங்கீடு செய்து கொள்ள இசைவு அளித்துள்ளன என 07.12.2005 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது, தற்பொழுது அத்தீர்ப்பிலிருந்து நீக்கப் படுகிறது எனவும், இதில் உள்ள எதிர்வாதிகளான, பொதுப்பணித்துறை செயலாளர், வருவாய்த்துறை செயலாளர், நிலநிர்வாக ஆணையர், திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வன அலுவலர், சேலம் ஆகியோர் இந்த பல்வகை மனுவின் வாதியான தொப்பப்பட்டி பொன்பரப்பி ஏரி ஆயக்கட்டு விவசாயிகள் நலச் சங்கம் மற்றும் முதல் எதிர்வாதி / ரிட் பெட்டிஷனின் மனுதாரரான அரியாக்கவுண்டம்பட்டி, ஒடுவன்குறிச்சி மற்றும் கதிராநல்லூர் ஆயக்கட்டு பாசன விவசாயிகள் நலச் சங்கம் ஆகியவற்றின் கோரிக்கையின் மீது விசாரணை மேற்கொண்டு நீர்பங்கீடு செய்வது குறித்து இவ்வுத்தரவு கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து ஆறுமாத காலத்திற்குள் உரிய முடிவினை (appropriate decision) மேற்கொண்டு, ஆணை பிறப்பிக்க வேண்டும் என்றும் அதுவரையில் 07.12.2005 அன்று பிறப்பிக்கப்பட்ட மற்ற ஆணைகள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்றும் உத்திரவிட்டு, இந்த பல்வகை மனுவினை முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது என உத்தரவு வழங்கியுள்ளது.

4. சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.01.2008ம் நாளிட்ட உத்தரவிற்கிணங்க, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் விசாரணையை மேற்கொண்டு உரிய முடிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

5. பார்வை 7ல் படிக்கப்பட்ட நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்தில், மேற்கண்ட தீர்ப்பின் அடிப்படையில் நாமக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் (மாவட்ட ஆட்சியரின் பொறுப்பு) சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் 5.3.2008 அன்று தல ஆய்வு மேற்கொண்டதாகவும், இவ்விரு ஆயக்கட்டுதாரர்களிடையே சமரசம் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாகவும் தெரிவித்து, மேற்படி நிலங்களின் பூகோள அமைப்பு, ஏரிகளின் கொள்ளளவு, மேற்படி ஏரிகளினால் பயன்பெறும் ஆயக்கட்டுக்களின் விவரம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, தொப்பப்பட்டி ஏரி மற்றும் அரியாக்கவுண்டம்பட்டி ஏரி ஆயக்கட்டுதாரர்களிடையே முறையே 70 : 30 என்ற விகிதத்தில் நீர்ப்பங்கீட்டினை நிர்ணயிக்கலாம் என நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரைத்து இதற்கான ஆணையை பிறப்பிக்குமாறும், நீரை பகிர்ந்தளிப்பதற்கான தடுப்புச் சுவரை கட்டுவதற்காக நிதியை ஒதுக்கீடு செய்து தருமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. பார்வை 8ல் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரது கருத்துருவினை பரிசீலனை செய்து உரிய ஆணையை பிறப்பிக்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

7. இந்நிலையில், 27.01.2009 அன்று அரியாக்கவுண்டம்பட்டி, ஒடுவன்குறிச்சி மற்றும் கதிராநல்லூர் ஆயக்கட்டுப் பாசன விவசாயிகள் நலச் சங்கம் சார்பாக அளிக்கப்பட்ட மனுமீது, நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் தனது பரிந்துரையினை அளிக்குமாறு அரசு கேட்டுக் கொண்டது. இதன் மீது மேலே பார்வை 10ல் படிக்கப்பட்ட நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிக்கையில், தொப்பப்பட்டி ஏரி மற்றும் அரியாக்கவுண்டம்பட்டி ஏரி ஆயக்கட்டுதாரர்களிடையே ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டவாறு 70 : 30 என்ற விகிதத்தில் நீர்பங்கீடு செய்வதற்கு ஆணைகள் வெளியிட அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

8. நீர்வள ஆதாரத் துறை, திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை மற்றும் முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கருத்து ஆகியவற்றினை, அரசு கவனத்துடன் ஆய்வு செய்து, நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம் பச்சுடையாம்பாளையம் கிராமத்தில், பைல்நாடு வனப்பகுதி வழியாக பாயும் பாலாற்று நீரை தொப்பப்பட்டி ஏரி மற்றும் அரியாக்கவுண்டம்பட்டி ஏரி ஆயக்கட்டுதாரர்களிடையே முறையே 70 : 30 என்ற விகிதத்தில் நீரைப் பகிர்ந்து அளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் / தலைமைப் பொறியாளர் (திருச்சி மண்டலம்), நீர்வள ஆதாரத்துறை இவ்வாணையினை நடைமுறைப்படுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர் மற்றும் நிலநிர்வாக ஆணையர், சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம், நாமக்கல்.
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.

<u>நகல்:</u>
தலைவர், தொப்பப்பட்டி, பொன் பரப்பி ஏரி ஆயக்கட்டு விவசாயிகள் நலச் சங்கம், புதுக்குடியார் தோட்டம், தொப்பப்பட்டி (அஞ்சல்), நாமகிரிப்பேட்டை (வழி), இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.
தலைவர், அரியாக்கவுண்டம்பட்டி, ஒடுவன்குறிச்சி மற்றும் கதிராநல்லூர் ஆயக்கட்டுப் பாசன விவசாயிகள் நலச் சங்கம், கதவு எண் 2/2, அரியாக்கவுண்டம்பட்டி, நாமகிரிப்பேட்டை அஞ்சல், இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.
வருவாய்த்துறை, சென்னை–9.
அரசாணை (நிலை) எண் 278, பொதுப்பணித்துறை, நாள் 03.09.2007.
இ.கோ / உ.ந.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்